# குளியாப்பிட்டி நகர சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, குளியாப்பிட்டி நகர சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குளியாப்பிட்டி நகர பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) களஞ்சிய மெய்மையாய்வின் பிரகாரம் இருப்பின் பெறுமதி ரூபா 8,078,128 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அந்த மீதி ரூபா 16,200,834 ஆகக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் பொதுக் களஞ்சிய மீதி ரூபா 8,122,706 தொகை அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் பெறப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுக்காக அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய வட்டித் தொகையான ரூபா 1,343,503 கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கடன் பணத்திற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 2,184,995 தொகையான கடன் தவணைப் பணம், கடன் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு கடன்கொடுத்தேரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மூலதன செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் நிறைவேற்றப்படாதிருந்த 10 மூலதன செயற்திட்டங்களுக்குரிய ரூபா 13,627,856 தொகை கடன்கொடுத்தோர் மீதியில் காணப்பட்டது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 53,255,509 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 19,942,442 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,387,723 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

2008 ஆம் ஆண்டின் போது கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 376,721 தொகை தீர்க்கப்படாத மீதியாகக் காணப்பட்டதுடன் 2010 ஆம் ஆண்டின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் வட்டிக் கொடுப்பனவிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,611,168 தொகையான அளவு உரிய வட்டி செலுத்தி பூர்த்த செய்யப்பட்டிருந்த போதிலும் கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 9,398 | 9,280 | 6,443 |
| (ii) | வாடகை | 10,193 | 10,640 | 1,254 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 13,559 | 13,559 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 55,155 | 51,329 | 10,790 |

### 2.3.2 ஆதனவரி

2012 ஆம் ஆண்டிற்குரிய ஆதன வரி பட்டியலிடல்கள் ரூபா 7,859,249 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் ரூபா 5,493,262 தொகையான ஆதன வரி நிலுவை நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 170 ஆம் பிரிவின் பிரகாரம் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு நிலுவையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது நீண்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட நிலுவை மீதி ரூபா 516,079 ஈக இருந்தது.

### 2.3.3 பஸ் நிலையக் கட்டணம்

சபையினால் பஸ் நிலையக் கட்டணமாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகள் வாகனத் தரிப்பிடத்திற்கு உள்ளெடுப்பதற்காக ரூபா 25,000 தொகையான மாதாந்தக் கட்டணம் அறவிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய உடன்படிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை போக்குவரத்துச் சபையிடமிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபைக்கு ரூபா 298,806 தொகை அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட போதிலும் இது வரையிலும் அந்தப் பணத்தை அறவீடு செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் இது தொடர்பாக தண்டப்பண கணிப்பீடு செய்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 நீர்க் கட்டணம்

நீர்க் கட்டணம் செலுத்தாமையின் அடிப்படையில் நீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்ட 13 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்தும் அறவிட வேண்டியிருந்த ரூபா 51,085 தொகையான நிலுவை நீர்க்கட்டண மீதி காணப்பட்டதுடன் நகர சபை நீர் உத்தேசத் திட்டத்தின் கீழ் 14 பொலீஸ் விடுதிகளுக்கு நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காகக் காணப்பட்ட நீர் மாணிகள் செயற்பாடற்றுக் காணப்பட்டமையின் காரணமாக மாதாந்தம் ரூபா 150 தொகையான நிலையான கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. 9 நீர் மாணிகளில் ரூபா 77,059 தொகையான நிலுவை மீதி காணப்பட்டது.

### 2.3.5 வினோத வரி

சினிமா மண்டபங்களிலிருந்து வினோத வரிப்பணம் அறவிடுவதற்குரிய நுழைவுச் சீட்டுக்களை முத்திரையிடும் சந்தர்ப்பத்தின் போது உரிய வினோத வரி அறவிடல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 3 சினிமா மண்டபங்களில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 796,488 தொகையான நிலுவை வரி காணப்பட்டது.

### 2.3.6 வாகனத் தரிப்பிடக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குரிய உப விதிகள் ஏற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட முச்சக்கர வண்டி நிறுத்துவதற்குரிய வருடாந்த அல்லது கால ரீதியான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட முச்சக்கர வண்டியைப் பதிவு செய்தலோ அல்லது முறைமைப்படுத்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 5,899,892 ஆக இருந்தது.

### 2.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

சபைக்குச் சொந்தமான குளியாப்பிட்டி – மாதம்பை வீதியில் அமைந்துள்ள கச்சேரிக் கட்டிடம் மாதாந்தம் ரூபா 30,000 தொகையில் வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் வாடகையாளரினால் இந்தக் கட்டிடம் ரூபா 2,000,000 அளவிலான செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அதற்காகப் பெறப்பட்ட அங்கீகாரம் வாடகையாளருடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடு, புனரமைப்பதற்குரியதாக சபை அங்கீகரித்த மதிப்பீடு என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வாடகையாளருடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் பிணைப் பணம் தொடர்பான பிரிவு குறிப்பிடப்படாதிருந்ததுடன் இக்கட்டிடத்திற்குரிய பிணைப் பணமாக ரூபா 90,000 தொகை பெறப்பட்டிருந்தது.

### 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

உள்ளூராட்சி நிறுவனங்களின் நகராதிபதிகள், தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்காக 2012 ஆகஸ்ட் 09 ஆந் திகதி தொடக்கம் 16 ஆந் திகதி வரை வியட்னாம் சுற்றுலாவிற்காக வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2012 யூலை 25 ஆந் திகதிய ஜீஜீஆர்சீ/21/30 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் விமானப் பயணக் கட்டணம், உணவு மற்றும் தங்குமிடங்களை உள்ளடங்கிய சகல செலவினங்களுக்காகவும் ரூபா 172,500 தொகை மற்றும் அமையக் கொடுப்பனவாக நாளொன்றிற்கு அமெரிக்க ஐ.டொலர் 30 படி சபை நிதியத்திலிருந்து செலவினங்களைச் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சுற்றுலாவிற்காக சபையினால் செய்ய முடியுமான தொகை ரூபா 401,171 ஆக இருந்த போதிலும் சுற்றுலாவிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 497,371 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

சபையினால் காணி மற்றும் கட்டிடங்களுக்குரிய நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் காணி மற்றும் கட்டிடங்களின் மெய்மையாய்வும் காலரீதியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.7 மனித வள முகாமைத்துவம்

சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 124 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 101 ஆனமையால் வெற்றிடம் 21 ஆகக் காணப்பட்டதுடன் அதனுள் செயலாளர் பதவி மற்றும் 03 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியில் 02 பதவியும், 03 வருமானக் கட்டுப்பாட்டாளர் பதவியில் 01 பதவியும் மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடமாகக் காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக அமைய, நாட்கூலி அடிப்படையில் 81 ஊழியர்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 2.8 சபைக்கு எதிரான சட்ட விடயங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குளியாப்பிட்டி – மாதம்பே வீதியில் ஆதன வரி இல. 206 ‘‘பீ’’ என்ற சொத்தின் உரிமை தொடர்பாக சபைக்கு எதிராக குளியாப்பிட்டி மாவட்ட நீதி மன்றத்தில் 15082 ஆம் இலக்கத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணை செய்யப்பட்ட பின்னர் முறைப்பாட்டாளருக்குச் சாதகமான வகையில் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் நகர சபை அச் சொத்திற்காக செய்யப்பட்ட நட்டத்திற்காக ரூபா 500,000 தெகையைச் செலுத்துமாறும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. சபையினால் அதற்கு எதிராக முறைப்பாட்டுக் கடிதம் ஒன்று குருணாகல் மாகாண சிவில் விசாரணை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இது வரையிலும் வழக்கு முடிவடையாமல் காணப்பட்டது.

(ஆ) காணியின் ஊடாக காண் ஒன்றை நிர்மாணிப்பதற்கு எதிராக காணி உரிமையாளரினால் 2006 திசெம்பர் 08 ஆந் திகதி 15593 L ஆம் இலக்க வழக்கின் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும் வழக்கு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.9 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 6,771,790 ஆக இருந்தது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணைக் கட்டணமாக ரூபா 21,451 படி அந்நிதியத்தினால் அறவிடப்பட்டிருந்த போதிலும் அந்த அறவிடல்கள் சபையின் எந்த ஊழியர்களுக்குரியது என சபை அறிவித்திருக்கவில்லை.

(ஆ) சுகாதாரப் பாதுகாப்பு விற்பனைக் கூடாரங்களை 50 சதவீத மானியத்தின் கீழ் மீன் உற்பத்தி வியாபாரிகளுக்கும் விற்பனை செய்கின்ற நிறுவனங்களுக்கும் வழங்குவதற்காக ரூபா 113,160 தொகை செலுத்தி வடமேல் மீன்பிடி அலுவல்கள் அமைச்சிலிருந்து 2012 மே மாதத்தின் போது 06 கூடாரங்களை சபை பெற்றிருந்தது. இந்த விற்பனைக் கூடாரங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நலனாளிகளுக்கு வழங்கப்படாதிருந்ததுடன் இந்த விற்பனைக் கூடாரங்களை நலனாளிகளுக்கு விநியோகிப்பதற்காக நலனானிகளை தெரிவு செய்தல், அதற்காக செலவிட்ட தொகையைப் பெற்றுக் கொள்ளல், விற்பனைக் கூடாரங்களை வைக்கும் இடங்கள் தொடர்பான முறைமையொன்று சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் ரூபா 720,000 தொகையான நிதியேற்பாட்டின் அடிப்படையில் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்ட 9 நலன்புரிச் செயற்பாடுகளும், மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 8,650,000 தொகையான 13 மூலதன நிகழ்ச்சித் திட்டங்களும், அவ்வாறே 4 செயற்திட்டங்களையும் மேற்கொள்வதற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 4,475,107 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்

(ஊ) மனித வள முகாமைத்துவம்